00105

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் The Open University of Srilanka
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம் Faculty of Humanities and Social Sciences
தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி - 2022/2023
Bachelor of Arts (Honors) in Tamil and Tamil Language Teaching - 2022/2023
இறுதிப்பரீட்சை (Final Exam)
மட்டம் (Level) - 04 பருவம் (Semester) - 01
LEU4321- மொழியும் மனித உரிமைகளும் Human Rights and Language
காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்
Three (03) Hours

| | |
|---|---|
| திகதி:- 23.11.2024 | நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30 |
| Date :- 23.11.2024 | Time : 09.30 a.m – 12.30 p.m |

அறிவுறுத்தல்கள்/Instructions

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசியுங்கள்
- உங்களுக்குரிய சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிடுக
- விடைக்குரிய சரியான வினா இலக்கங்களைக் குறிப்பிடுக
- தரப்பட்டுள்ள ஆறு(06) வினாக்களுள் நான்கு(04) வினாக்களைத் தெரிவு செய்து விடையளிக்குக
- தெளிவற்ற எழுத்துகள், எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும் என்பதனைக் கவனத்திற் கொள்க

- **Read the given instruction carefully**
- **Please write the correct index Number**
- **Answer only 4 Questions**
- **Mark will be deducted for unclear writing, spelling and grammatical errors**

முக்கிய குறிப்பு (Note) :
உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் முன்பக்கத்தின் முடிவுப்பகுதியில் உங்களுக்குரிய சரியான பதிவிலக்கத்தினையும் குறிப்பிடுக.
**At the bottom of the front page in your answer sheet, mention your correct Registration Number.**
பதிவிலக்கத்தினையோ, சுட்டெண்ணையோ பிழையாக எழுதினால் உங்களால் புள்ளிகளைப் பெற முடியாது என்பதைக் கவனத்திற் கொள்க.
**If you write your Registration Number and Index number incorrectly marks will be not obtained.**

தரப்பட்டுள்ள ஆறு (06) வினாக்களுள் நான்கு (04) வினாக்களை மட்டும் தெரிவு செய்து விடை எழுதுக. வினாக்களை முழுமையாக வாசித்து, பூரணமாக விளங்கிக் கொண்டதன் பின்னர் விடைகளை எழுத ஆரம்பிக்கவும்.

1) "இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முடிவினைத் தொடர்ந்து ஏற்பட்ட உலக சமாதானம் மற்றும் அமைதியைப் பேணிக் காத்தலின் அவசியத் தன்மையின் வெளிப்பாடே 1948ஆம் ஆண்டின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனமாகும்".(UDHR)

மேற்தரப்பட்ட கூற்றினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் முக்கியத்துவத்தினை, அதில் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமைகளைக் கருத்திற்கொண்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)

2) பின்வரும் சர்வதேச மனித உரிமை பொருத்தனைகள் தொடர்பாக இலங்கைக்குரிய கடப்பாடுகளை ஆராய்க.

1. குடியியல், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் **(ICCPR 1966)**
2. பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் **(ICESR 1966)**

(25 புள்ளிகள்)

3) **அ.** அடிப்படை உரிமைகள் மீறல் வழக்கு ஒன்றின் முக்கியத்துவத்தை உதாரணங்களுடன் ஆராய்க.

(10 புள்ளிகள்)

**ஆ.** இலங்கை உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறலுக்கான வழக்கினை தாக்கல் செய்வதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடுகளை பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளின் உதவியுடன் ஆராய்க.

(15 புள்ளிகள்)

4) "இலங்கையின் அரசியலமைப்பின் கீழான உறுப்புரை 10 ஆனது மதமாற்றம் செய்வதற்கான உரிமையை அங்கீகரித்துள்ளது"
மேற்தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையினை அரசியலமைப்பு உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களை ஆதாரமாகக் காட்டுவதனூடாக நியாயப்படுத்துக.

(25 புள்ளிகள்)

5) கீழ்தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் மீறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பொருத்தமான சட்ட ஏற்பாடுகளுடன் ஆராய்க.

**அ.** சமன், திருட்டுக் குற்றம் புரிந்திருப்பதாக சந்தேகிக்கப்பட்டு பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். கைதுக்குரிய காரணங்கள் எதுவும் அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை. சமனை பொலிஸ் வாகனத்தில் ஏற்றுகின்ற போது பொலிசார் கடுமையான அவதூறு வார்த்தைகளைப் பயன்படுத்தினர். பொலிஸ் நிலையத்திற்கு அவரைக் கொண்டு சென்ற பின்னர் விசாரணை நடைபெற்றது. அவரது விசாரணையின் போது உண்மையினைக் கூறுமாறு பொலிசார் அவரைச் சரமாரியாகத் தாக்கியதோடு, உணவு வழங்கப்படாமல் நிர்வாணமாக சிறையில் இரண்டு நாட்கள் அடைத்து வைத்தனர். சமன் தனது உறவினர்களைச் சந்திப்பதற்கு கோரிய போதும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

**ஆ.** விமல், கமல், சுரேஷ் ஆகியோர் காணாமல் போனோர் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களாவர். அவர்கள் மூவரும் ஒரே தகைமையினையும் அனுபவத்தையும் கொண்டிருந்தனர். அவர்களது அனுபவம், மற்றும் சேவைக்காலம் ஆகியவற்றின் அடிப்படைகளில் அவர்களது பதவியுயர்வு தொடர்பான விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்பட்டன. சுரேஷ் பதவியுயர்வை எதிர்பார்த்திருந்த போதிலும், குறிப்பிட்ட பதவியுயர்விற்கு கமல் மற்றும் விமல் ஆகியோர் மாத்திரமே மேலதிகாரியினால் கருத்திற் கொள்ளப்பட்டனர்.

(12.5 x 2 = 25 புள்ளிகள்)

6) கீழ்தரப்பட்டுள்ளவற்றின் மீது குறிப்பு வரைக.

1. 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழான அடிப்படை உரிமைகள்
2. இலங்கை அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின் கீழான மொழி உரிமை

(12.5 x 2 = 25 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் - 100)

- முழுப்பதிப்புரிமையுடையது -